பணத்தை 32,324 ரூபாய்க்கு மாற்றினார்கள். அதிலே ராஜு என்பவர் பெரிய கருப்பண்ணனை ஏமாற்றி 27,274 ரூபாயை மாத்திரம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு 5,050 ரூபாயை சுருட்டிக்கொண்டார். அதற்குப் பிறகு இந்த ராஜு செய்த குற்றத்திற்காக, பயிற்சி பெற்று கொண்டிருந்த பெரிய கருப்பண்ணன் 5,050 ரூபாயை கட்டவேண்டிய நிலை ஏற்பட்டு அவரும் கட்டி விட்டார். அதற்குப் பிறகு ராஜு மீது பெரிய கருப்பண்ணன் வழக்குப் போட்டு, அந்த ராஜு தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு பணத்தைப் கொடுத்துவிட்டார். இப்படிப்பட்டவர்கள் இருக்கலாமா என்று நண்பர் தியாகராஜன் கேட்டார். இந்த ராஜு என்பவர் 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் தேதியன்று போலீஸ் கான்ஸ்டேபிள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார். அவருடைய பழைய வரலாற்றை இப்போது பார்த்தால், அவர் திருட்டுகள், கையாடல்கள் முதலியவற்றில் திறமைசாலியாக இருந்திருக்கிறார் என்பது பிறகு தான் தெரியவந்தது.

திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, இந்த தவறுக்காக யார் யார் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அம்மாதிரி செய்த ராஜு வேலையிலிருந்து நீக்கப்பட்டார். பெரிய கருப்பண்ணன் இந்த, குறிப்பிட்ட பில்லை மாற்ற அலுவலகத்திற்குச் செல்லத் தவறியதற்காக, அவருடைய ஊதியத்தில் இரண்டு வருடத்திற்கான படிகள் குறைக்கப்பட்டன. ராஜு வேலைக்கு வருவதற்கு முன்னால், அவருடைய நடத்தையைப் பற்றி விசாரித்து தகவல் அறிவித்த சப் இன்ஸ்பெக்டர், தவறான அறிக்கையை கொடுத்ததற்காக அவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மதுரை மாவட்ட அர்பன் அலுவலக மானேஜரும், அக்கவுண்டண்டும் நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

Saraswathi Mahal, Thanjavur

*** 183 *Q*.—THIRU N. R. THIAGARAJAN:** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of books and manuscripts available in Saraswathi Mahal, Thanjavur ;

(*b*) the books available on medicine and home science ;

(*c*) the number of books that can be prescribed as text-books in schools ; and

(*d*) whether there is any proposal to prescribe them as text books in schools ?

சரஸ்வதி மகால், தஞ்சாவூர்.

திரு. என். ஆர். தியாகரராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை சரஸ்வதி மகாலில் மொத்தம் எத்தனை புத்தகங்கள் ஏடுகள் இருக்கின்றன ?

(இ) வைத்தியம், மனை இயல் பற்றி என்ன புத்தகங்கள் உள்ளன ?

(உ) பள்ளிபாட புத்தகங்களாக வைக்கத் தகுதி வாய்ந்தவை எத்தனை?

(எ) அவற்றைப் பாட புத்தமாக வைக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) சுமார் 2,000 அச்சிட்ட புத்தகங்களும், சுமார் 40,000 கையெழுத்துச் சுவடிகளும் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் உள்ளன.

(இ) சரஸ்வதி மகால் நூல் நிலையம் வைத்தியத்தைப் பற்றி 24 புத்தகங்களும், மனை இயலைப்பற்றி இரண்டு புத்தகங்களும் வெளியிட்டு உள்ளது.

(உ) ஒன்றுமில்லை.

(எ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் சரஸ்வதி மகாலிலிருந்த புத்தகங்களைத்தான் ஜெர்மனி வரையிலும் எடுத்துக்கொண்டு போய், "ஹிட்லர் அந்தப் புத்தகங்களை வைத்துக்கொண்டு அணுகுண்டைக் கண்டுபிடித்தான்", என்று கூறப்படுகிறதே, அப்படி அங்கிருந்து புத்தகங்கள் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கின்றனவா ? அவர்கள் புதிதாகக் கண்டுபிடித்தவைகள் அந்தப் புத்தகத்திலிருந்து தான் என்று கூறப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கூற்று சாதாரணமாகச் சொல்லப்பட்டு வருகிறதே தவிர, அதற்கு ஆதாரங்கள் இருப்பதாக தெரியவில்லை. அங்கிருந்து எந்தப் புத்தகங்களை எடுத்துச் சென்றார்கள், எப்படி அவற்றைப் பயன்படுத்தினார் கள் என்பதற்கான விவரங்கள் இல்லை. பொதுவாக மருத்துவத் துறை யிலுள்ளதும் மற்ற துறையிலுள்ளவைகளிலுமுள்ள, சில பல, நுணுக்கங் கள் ஆராயப்பட்டு வருகின்றன. இப்போது கூட சித்த, ஆயுர்வேத முறை யில் சில பல முறைகளைக் கையாண்டு, நவீன மருந்துகளைத் தயாரிக்கும் முறையை மேற்கொண்டிருக்கிறார்கள். சரஸ்வதி மகாலிலிருந்து கொண்டு போன புத்தகத்திலிருந்து தான் அணுகுண்டு கண்டிபிடித்தார்கள் என்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை.

திரு. எம். எத்திராஜுலு : பண்டைக்காலத்தில், சரபோஜி மகாராஜா வினால் சேர்க்கப்பட்ட அந்தப் புத்தகங்களில், வைத்தியம், மனையடி சாஸ் திரம் போன்ற புத்தகங்கள் இருக்கின்றனவா ? அதை அச்சிடப்பட்டு தமிழகத்திலுள்ள எல்லா லைப்ரரிகளிலும் வைப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : முதலிலேயே கூறியபடி முக்கியமான நூல்கள் என்று கருதப்படுபவையில் 22 தமிழ் நூல்கள் மருத்துவத் துறையைப் பற்றியது. சம்ஸ்கிருதம், தமிழ், இரண்டும் கலந்த இரண்டு நூல்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. கட்டிடப் பொறியியல் பற்றிய இரண்டு நூல்கள், சம்ஸ்கிருதம், கிரந்தம், ஆகியவற்றில் உள்ள நூல்கள், பதிப்பிக்கப்பட்டன. மற்றும் நூல் நிலையங்களில் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டால் அவைகளை வைக்க ஏற்பாடு செய்யப் படும்.

Thiru V. K. RAMASWAMY MUDALIYAR : I am told that many of the valuable books are slowly fading out due to efflux of time. Is there any proposal to reprint all these valuable books so as to keep them permanently as records in the Saraswathi Mahal Library ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : முதலிலே கூறியபடி கையெழுத்துப் பிரதிகள் "Mauuscript" என்பவை 22,000 மும், சுவடிகள் 18,000மும் இருக்கின்றன. மிக முக்கியமானவை, பயன் படக்கூடியவை, தேவையானவை என்பவற்றை ஆராய்ந்து பார்த்து, இப் போது 24 மருத்துவ இயல் நூல்களும், கட்டிட இயலைப் பற்றிய இரண்டு புத்தகங்களும் வெளியிட்டிருக்கிறார்கள். பதிப்பிக்கக்கூடிய வாய்ப்புள்ள பயன்படக்கூடுமென்று எதிர்பார்க்கின்ற நூல்களை பதிப்பிக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, has anyone of these texts on medicine been submitted to the Medical Research Institute at Lucknow for research purposes ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும்பாலான புத்தகங்கள், சுவடிகள், எல்லாம் சரபோஜி காலத்தில் சேகரிக்கப்பட்டவை. கிட்டத்தட்ட 1790-க்கும் 1800-க்கும் இடையில் அந்த நூல்கள் திரட்டப்பட்டுள்ளன. அவை இப்போதுள்ள பாடத்திட்டங்களுக்கு முழு அளவில் பயன்படக்கூடிய அளவில் இருக்காது. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் நூல்கள் இருக்கக்கூடும். அப்படிப்பட்ட நூல்கள், மருத்துவ நிலையங்கள் போன்றவைகளில் இல்லாவிட்டால், அங்கே வைப்ப தற்கு ஏற்பாடு செய்யலாம்.

Valangaiman High School

184 *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any strike was staged by the students of Valangaiman High School, Thanjavur District, on 12th of October 1967, as a result of the teachers' misbehaviour towards girl students of that school ; and

(*b*) the steps taken by the Government thereon ?

வலங்கைமான் உயர்நிலைப் பள்ளி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டம் வலங்கைமான் உயர்நிலைப் பல்ளியில் படிக்கும் மாணவிகளிடம் ஆசிரியர்கள் தகாத முறையில் நடந்ததாக அக்டோபர் மாதம் 12-ம் தேதி வேலை நிறுத்தம் ஏதாவது நடந்ததா ?

(இ) இதன்மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) and (இ) 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதி விடுமுறை நாளானதால் இத்தகைய நிகழ்ச்சி ஏதும் நடைபெறவில்லை. அப்பள்ளி ஆசிரியர் ஒருவர் தகாத முறையில் நடந்து கொண்டதாகச் சொல்லிக் கொண்டு அவரை மாற்றும்படி கோரி, 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் தேதி அன்று காலையில் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல வில்லை. அங்குள்ள உள்ளூர் அதிகாரிகள் தலையிட்ட பின்னர் அன்று மாலையே மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்றனர். எனினும், அந்த ஆசிரியர் பட்டுக்கோட்டைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

திரு. எம். எத்திராஜுலு : மாணவிகளிடம் ஆசிரியர் தகாத முறை யிலும், ஆசிரியைகளிடம் ஆசிரியர்கள் தகாத முறையிலும், பல நிகழ்ச்சி கள் நடந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதைத் தவிர்க்க பெண்கள் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு ஆண்களை நியமிக்காமல், அதே போல் ஆண் கள் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு பெண்களைப் போடாமல், இருவரும் சேர்ந்து ஒரே பள்ளியில் பணியாற்றுமல் இருக்கக்கூடிய வகையில் சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குறிக்கோள் தான் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதை மாற்றவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூட பல சமயங்களில் முறையிடுகிறுர்கள். பி.யு.சி. அளவில் இதைக் கட்டாயமாகச் செய்யவேண்டுமென்று, துணைவேந்தர் அவர்களும் கண்டிப்போடு சொல் கிறுர்கள். உதாரணமாக "அரியலூரில் பெண்கள் படிக்க வாய்ப்பில்லை ; திருச்சிக்கு அனுப்ப வேண்டிய வழியில்லை. கல்லூரியில் சேர்க்கவேண்டு மென்று" முறையிடுகிறுர்கள். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தும் கூட, பெண்கள் பள்ளி தனியாக வைத்தாலும், ஆண்கள் பள்ளிகளில் சேர்க்க பெற்றேர்கள் விரும்புகிறுர்கள். கேட்டால் வீட்டு வசதி என்று